கொண்டிருக்கின்றன. கல்லணைப் பகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவோணம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. நெற் கதிர்கள் பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மிக அவசரமாகத் தண்ணீர் வேண்டுமென்று அன்றே பேசினேன். அதற்கு பதில் இல்லை. 16-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கும் பதில் இல்லை. அதை 50-வது விதி யின்கீழ் மாற்றினீர்கள். அதற்கும் பதில் இல்லை. அந்த கல்லணை கால்வாயில் தண்ணீர் விடப்படுமா ? எவ்வளவு தண்ணீர் கொடுக் கப்போகிறார்கள் ? கொடுக்க முடியுமா ? முடியாதா ? இப்படிப் பட்ட சூழ்நிலையில் அந்தப் பகுதியில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தந்தி மேல் தந்தி அனுப்புகிறார்கள். தயவுசெய்து விரிவான அறிக்கை தர அன்புடன் வேண்டுகிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் எல்லாம் போன் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொன்னால் விடை வரும். விளக்கமாகச் சொன்னால் அனுமதியே வராது. (குறுக்கீடு) உங்களுடைய கேள்வி அனைவருக்கும் புரிகிறது. விடை வருகிறது.

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்** : தலைவரவர்களே, அங்கத் தினர் இந்த அவையில் கல்லணைக் கால்வாயில் தண்ணீர் விடப் படுமா என்று கேட்டபோது, அப்போதே ஒரு மணி நேரத் திற்குள் அதிகாரிகளோடு கலந்து பேசி, அந்தப் பகுதியில் தண்ணீர் விடப்படும் என்று தெரிந்ததும், நானும் அங்கத்தினர் அவர்களை அழைத்து, நாங்கள் பேசிய பிறகு நான் சேகரித்த விவரம் இது என்று உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்திருக் கிறேன். 3 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் திறந்துவிட இருக் கிறோம். அது கடைமடைப் பகுதிக்கு வர காலதாமதம் ஏற்பட் டிருக்கலாம். எப்படியும் தண்ணீர் வரும்.

(ஐ) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, நேற்றையதினம் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மதுரை மாவட்டத் தில் சுமார் 28,000 ஹெக்டேர் நிலத்தில், தண்ணீர் இல்லாத காரணத்தால், பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன ; அங்கேயுள்ள

1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைகளுக்கு சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அந்தப் பயிர்கள் காப்பாற்றப்படவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அரசால் அங்கத்தின ருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

(ஓ) உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்குதல்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் வாழ்கிற விவசாயி களைப் பற்றிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச் சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

உசிலம்பட்டித் தொகுதியில் கடந்த 2 போகங்களாக நெல் அறுவடை செய்யப்படாமல் பயிர்களெல்லாம் காய்ந்துவிட்ட காரணத்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் அந்தத் தொகுதியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி சாகுபடியும் சென்ற ஆண்டு முழுமையாகப் பாதிக்கப் பட்டு விட்டது. திருமங்கலம் பகுதியில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நெல் விளைச்சலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. அதன் காரணமாகவே தொகுதியிலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் தஞ்சை மாவட்டத்தையும் மற்ற பகுதிகளையும் நோக்கி மூட்டை முடிச்சுகளோடு நாள்தோறும் நூற்றுக்கணக்கில் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, நிவாரணப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நானும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஓ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருகிறேன்.